IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 20/2018

Deposition of Witness : PW 1

Name : அங்கம்மாள் (வயது –70 )

Father's Name /W/o : க/பெ தானமய்யா

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : அரக்கோணம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 18.07.2025.

## குறுக்கு விசாரணை

1. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் என் வீட்டு வடக்கு பக்கமாக காலி இடம் விட்டிருந்தேன் பிரதிவாதிகள் சுவர் எழுப்பிவிட்டனர் அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி இடம் எவ்வளவு அளவு என்றால் அகலம் 7 அடி நீளம் தெரியவில்லை. இந்த சொத்து முதன் முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தாத்தா வெங்கடேசனுக்கும் மற்றும் என் பாட்டிக்கு சொந்தமானது. மேற்படி சொத்தை என் தாத்தா எப்படி வாங்கினார் என்றால் புறம்போக்கு நிலத்தில் என் தாத்தா மற்றும் பாட்டி 1950 ஆம் ஆண்டிலேயே குடியிருந்து வந்தார்கள். மேற்படி புறம்போக்கு நிலம் ரயில்வேக்கு சொந்தமானது என்றால் சரிதான்.

2. மேற்படி எவ்வளவு வீடு உள்ளது என்றால் 2000க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது. மேற்படி ரயில்வே நிலத்திற்கு பட்டா கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் வழக்கு தாக்கல் செய்த சொத்தில் குடியிருக்கிறேன். கதவு எண் என்னவென்றால்

முதலில் 10 தற்போது 7 ஆகும். மேற்படி ஏ.பி.எம் சர்ச் 1 ஆவது தெருவில் உள்ளது. பிரதிவாதி குடியிருக்கும் இடமானது ரயில்வேக்கு சொந்தமானது என்றால் சரிதான்.

3. மேற்படி காலி இடம் அகலம் 7 அடி நிலத்திற்கு என் பெயரில் பட்டா பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. நான் தாவாவில் எத்தனை ஐட்டம் சொத்து தெரிவித்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வட்டாட்சியர் பிரிவு 3 மற்றும் 5,6 இன் கீழ் எனக்கு நோட்டிஸ் கொடுத்தாக என் தாவாவில் நான் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன் ஒரு ஆளுக்கு 3 செண்ட் என்று நோட்டிஸ் கொடுத்தார்கள்.

4. மேற்படி சொத்தில் 50 வருடமாக வசித்து வருகிறேன் என்பதற்கான ஆதாரம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன் வரி ரசீது, மின் இணைப்பு ரசீது மற்றும் ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன். ஏ ஐட்டம் சொத்தை சீனிவாசன் என்பவருக்கு 12.09.2015 தேதியில் வாடகை ஒப்பந்த பத்திரம் மூலம் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். தற்போதும் தாவா ஏ அட்டவணை சொத்தில் சீனிவாசன் தான் உள்ளாரா என்றால் இல்லை அவர் 2 வருடத்திற்கு முன்பே காலி செய்துவிட்டார்.

5. நான் வழக்கை தாக்கல் செய்யும்போது சீனிவாசன் ஏ அட்டவணை சொத்தில் குடியிருந்து வந்தாரா என்றால் சரிதான். அவர் எதற்காக காலி செய்தார் என்றால் அவர் வீட்டிற்கு சென்றுவிட்டார். நான் 1986, 1991 மற்றும் 1992 ஆண்டுகளுக்கான வரிகள் மட்டும் தான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். மற்ற வரிகள் வீடு எரியும் போது எரிந்து விட்டது என்று நான் வாக்கு மூலத்தில் அல்லது தாவாவில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.